★ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தயா விடுத்த செய்தி

# 80 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் கிழக்கு மாகாணத்தில் இருந்து விரட்டியடிப்பு

துன்பங்களைப் பகிர்ந்து கொள்வோம் அன்பார்ந்த தமிழீழ மக்களே! நீங்கள் இதுவரை அதிக அளவில் அறிந்திராத துயரமான செய்தி ஒன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவைகள் நடந்து முடிந்து விட்ட சம்பவங்கள்தான். ஆனால் அது மறைக்கப்பட்டு விட்டதால் உலகத்தின் முகடுகளை உசுப்பவில்லை. இவ்வாறு விடுதலைப்புலிகளின் பிரதித்தலைவர் மாத்தயா விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளன. கடந்த 13. 09. 90 இலிருந்து 24. 10. 90 வரையிலான 41 நாட்களை மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளில் எமது தோழர்களுடனும். மக்களுடனும் கழித்தேன். எங்கள் உடன் பிறப்புக்கள் அங்கு படும் வேதனைகளும் இன்னல்களும் கொஞ்ச நஞ்சமல்ல. தமிழன் என்று இந்நாட்டில் பிறந்ததற்காக அவர்கள் கொல்லப்படுகின்றனர் அகதிகளாக்கப்படுகின்றனர். இன்றும் அவர்கள் எதுவுமற்றவர்களாக மரங்களுக்குக் கீழும்

—04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-00

முரசொலி

முரசு 04 ஒலி 279 திங்கள் 19-11-1990 (கார்த்திகை 03) ஐ அவ்வல் 01

# அமைதிப்படையை அனுப்பியபோது இந்தியக் குறிக்கோள் தெளிவில்லை

## 'றோ' வின் மூத்த அதிகாரி விமர்சனம்

"1971 இல் இந்திய இராணுவம் பங்களாதேஷிற்குள் நுழைந்த போது என்ன குறிக்கோளை அடைய வேண்டுமென்ற தெளிவு இந்திய அரசுக்கும், இராணுவத்துக்கும் இருந்தது. ஆனால் 1987 இல் இலங்கைக்கு அமைதிப்படை அனுப்பப்பட்டபோது இந்திய அரசுக்கோ, இராணுவத்துக்கோ அத்தகையதொரு தெளிவு இருக்கவில்லை. பங்களாதேஷ் பிரச்சினைக்கும் ஸ்ரீலங்காப் பிரச்சினைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு இதுதான்."

இவ்வாறு இந்திய உளவு ஸ்தாபனமான 'றோ'வில் உவது உயர் பதவி வகித்து அமைச்சரவைச் செயலகத்தில் இருந்து இளைப்பாறிய ஆர். சுவாமிநாதன் தெரிவித்தார்.

'றோ'வின் மூத்த அதிகாரி ஒருவர் சம்பிரதாயத்தை மீறி பத்திரிகைக்குப் பேட்டியளித்தது வரலாற்றில் இது முதற் தடவையாகும்.

ஈ. பி. ஆர். எல். எப்., ஈ. என். டி. எல். எப். ஆகிய இரு தமிழ்க் குழுக்களும்'றோ'வின் சிருஷ்டிகளே. 1987-ல் புலிகளை எதிர்க்க இந்தியா தீர்மானித்ததில் இருந்து 'றோ' இவற்றைக் கட்டி எழுப்பத் தொடங்கியது.

பங்களாதேஷில் இந்தியா அடைந்த வெற்றிக்கு பாராட்டும், ஸ்ரீலங்காவில் அடைந்த தோல்விக்குக் கண்டனமும் தெரிவிக்கப்படுகிறது. புலனாய்வு முகவர்களின் பணிகளை வெற்றி தோல்வி என்ற தெளிவான வரையறைகள் கொண்டு அளக்க முடியாது. அவை எமது குறிக்கோளிலேயே தங்கியுள்ளன. 1971ல் பங்களாதேஷில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக முதல்வர் மீது காங்கிரஸ் மீண்டும் குற்றச்சாட்டு

தமிழக அரசிற்கும் இலங்கைத்தமிழ்ப் போராளிகளுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை. அந்தளவுக்கு தமிழக அரசு போராளிகளுக்கு ஆதரவு வழங்குகிறது என மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி.

கடற்படையால் கைது

—04 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் தொண்டமான் சொல்கிறார் குழப்பத்தை ஏற்படுத்த மலையகத்தில் முயற்சியாம்

மலையகத்தில் அமைதி நிலவுவது சில பொலிஸாருக்கும், பத்திரிகைகளுக்கும் பிடிக்கவில்லை என்று அமைச்சர் தொண்டமான் மலையகத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

சிறு சிறு சம்பவங்களைப் பெரிதுபடுத்தி மலையகத்தில் குழப்பமும், குளறுபடியும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## இரு தமிழ் ரயில்வே ஊழியர்கள் மதவாச்சியில் தடுத்துவைப்பு

வவுனியா புகையிரதக் கடவை பாதுகாப்பு ஊழியர்கள் இருவர் கடந்த மூன்றரை மாதங்களாக மதவாச்சி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த வி. சுரேஷ்தமார், புளியங்குளத்தைச் சேர்ந்த கே. சிவ

—04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் அரச விடுதிகளில் பொருட்கள் கொள்ளை

வவுனியாவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த அலுவலகங்கள், விடுதிகளில் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் காணாமற் போயுள்ளன.

அப்பகுதி அரச அலுவலகங்களில் உள்ள மின்விசிறிகள், மின் மானிகள், ஹீட்டர்கள், மணிக்கூடுகள்,பலவும் காணாமற் போயுள்ளன.

—04 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் போராட்டம் புகைப்படக் கண்காட்சி

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் 'புலிகளின் போராட்ட வரலாறு' புகைப்படக் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர். 21 ம் திகதி முதல் 27 ம் திகதி வரை பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை கண்காட்சி நடைபெறும்.

## சிகிரியா கப்பல் திரும்பியது

பருத்தித்துறை துறைமுகத்தில் கடந்த புதன்கிழமை முதல் 600 மெட்ரிக் தொன் மாவை இறக்கிய சிகிரியாக் கப்பல் நேற்று திருகோண

—04ஆம் பக்கம் பார்க்க

## விசர்நாய்க்கடி மருந்து வந்தது

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்குத் தேவையான விசர்நாய்க்கடி மருந்துகள் யாழ் சுகாதார சேவைத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (50)

## கொழும்புக்கு 2-ம் கட்ட நோயாளர் கப்பல் மூலம்செல்லஏற்பாடு

கடுமையான நோயினால் பிடிக்கப்பட்ட நோயாளிகளைக் கப்பல் மூலம் கொழும்பிற்கு அனுப்பி சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுதுபருத்தித்துறையில் தரித்து நிற்கும்'குமண' எனும் கப்பல் கொழும்பிற்குத் திரும்பிச் செல்லும் பொழுது இந்நோயாளிகள் அக்கப்பல் மூலம் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்படுவர் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது கட்டமாக

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பஸ்சேவைகளை ஆரம்பிக்க இராணுவம்அனுமதிமறுப்பு

வவுனியா பஸ் டிப்போ ஊழியர்கள் கடமைக்கு படிப்படியாகத் திரும்புகின்றனர்.

சில உத்தியோகத்தர்கள் இ.போ.ச அலுவலகத்தில் தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பஸ் சேவைகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதோடு இராணுவம் அனுமதி வழங்கினால் முதலில் குறுகிய தூர பஸ்சேவையை ஏற்படுத்தலாமெனத் தெரியவருகிறது ஆனால் இராணுவம் தனது பாதுகாப்புக் கருதி அனுமதி வழங்க மறுத்து வருகிறது.

இதே சமயம் அனுராதபுரத்தில் இருந்து வரும் பஸ்களை நகர பஸ் நிலையம் வரை வருவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (38)

## பலாலி முகாம் தபாலகத்துடன் இணைந்து தபாற் சேவை முயற்சி

பலாலி இராணுவ முகாமில் அண்மையில் படையினருக்காக அமைக்கப்பட்ட தபாற்கந்தோருடன், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தபாற்கந்தோர்களை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

பலாலி முகாம் தபாற்கந்தோருக்கு, அனுப்பப்பட்ட சில தபால் ஆவணங்கள், வலிகாமம் வடக்குப் பகுதியில் உள்ள சில தபாலகங்களுக்கு தவறுதலாக அனுப்பப்பட்டுள்ளதால் அவற்றில் இருந்து இதனை அறியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## றொனி டீ மெல் மீதான மோசடி வழக்கு ஒத்திவைப்பு

முன்னாள் நிதியமைச்சர் றொனி டீ மெல் மீது தொடரப்பட்ட மோசடிக் குற்றச்சாட்டு வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அரசின் பணத்தில் 2, 376 656 ரூபாவை தனது சொந்தப் பாவனைக்காக உபயோகித்ததாகவும், 889, 189 ரூபாவை அந்நியச்செலாவணி மோசடி செய்ததாகவும் றொனி டீ மெல் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## திரியாய் ராணுவம் - புலிகள் மோதல்

கடந்த வெள்ளி திருமலை மாவட்டம் திரியாய் மகாவித்தியாலய இராணுவ முகாம் மீது புலிகள அருள் - 89ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர். ஷெல்கள் முகாமினுள் வீழ்ந்து வெடித்தன எனினும் ராணுவத்தினரின் சேதவிபரம் தெரியவில்லை.

— 04 ஆம் பக்கம் பார்க்க

### யாழ் போதனாவைத்தியசாலைக்கு

# தினசரி 100 லீற்றர் டீசல்

யாழ் போதனாவைத்திய சாலைக்குப் போக்குவரத்து, மற்றும் ஜெனரேற்றர் தேவைகளுக்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தினமும் 100 லீற்றரை வழங்கி வருகிறது எனத் தெரிவிக்கப் படுகிறது.

இதில் 75 லீற்றர் ஜெனரேற்றர் பாவனைக்கும் மிகுதி 25 லீற்றர் வாகனத் தேவைக்கும் பயன்படுத்துமாறுகட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணம் செஞ்சிலுவைச் சங்கத்திடமும் டீசல் கையிருப்பு இல்லாததே எனத் தெரிவிக்கப்படுகிறது. (71,47)

### விடுதலைப் புலிகளின்

# கல்வித்திட்ட மாற்ற உத்தேசத்திற்கு ஆதரவு

## த. ஆ. சங்கம் அறிவிப்பு

''தற்போதைய கல்வித் திட்டம் மாற்றப் படவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதரவளிப்பதுடன் அக்கல்வித் திட்டம் தயாரிப்பதற்கு தனது பூரண ஒத்துழைப்பையும் வழங்கும்.''

இவ்வாறு நல்லூர் இந்துவிடுதிக்கு அருகாமையில் இடம் பெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் புதிய பணிமனை திறப்பு விழாவில் உரையாற்றிய சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

''இவ்வருட க.பொ.த. (சா.த.) பரீட்சை டிசம்பர் மாதம் நடத்தக் கூடிய நிலைமைதற்பொழுதுஇல்லை பல மாணவர்கள் இடம் பெயர்ந்துள்ளதால் ஒழுங்கான முறையில் விண்ணப்பங்கள் அனுப்பப்பட முடியவில்லை'' எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பல திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும் ஊழியர்களுக்கான சம்பளத்தை பணமாக வழங்குவதற்கு முயற்சி செய்கின்ற போதும் கல்வித் திணைக்களம் மட்டும் இதில் அசட்டையாக இருக்கின்றதென்றும் நவம்பர் மாதச் சம்பளம் பணமாக வழங்கப்படாவிட்டால் தாம் போராட்டத்தில் குதிக்கப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னைய செயலகம் விமானத் தாக்குதலினால் சேதமடைந்ததனால் நல்லூர் இந்துவிடுதிக்கு அண்மையில் தற்காலிகமாக இப்புதிய செயலகம் திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (70)

# கிளிநொச்சியில் மாணவர்கள் உணவு உற்பத்தியில் தீவிரம்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் மாணவர்கள் உணவு உற்பத்தி வேலைகளில் துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இம்மாணவர்கள் பாடசாலை வளவிலும் வீட்டு வளவிலும் தமது ஆசிரியர்களின் ஆலோசனையுடன் இந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், கனகபுரம் மகாவித்தியாலயம், கனகாம்பிகைகுளம் மகாவித்தியாலயம், புனிதிரேசா மகளிர் பாடசாலை, உருத்திரபுரம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளும் இம் முயற்சியில் முன்னணி வகிக்கின்றன. (ப 6)

### மாங்குளத்தில் தொல்லை

# வெளியில் இராணுவத்தால் வனப்பாதையில் யானையால்

மாங்குளத்தில் யானைக் கூட்டங்களின் தொல்லையால் பயணிகள் அவதியுறுகின்றனர்,

வீதியில் இராணுவத்தினரின் தொல்லை, காட்டுப் பாதையில் யானைகளின் தொல்லை; இவற்றால் பயணிகள் தினமும் அஞ்ச வேண்டியேற்படுகிறது.

மாங்குளம் காட்டு வீதியால் சென்ற கிளிநொச்சி பஸ் சாலையைச் சேர்ந்த நடத்துநர் தங்கவேலாயுதம் என்பவர் யானைத் தொல்லையில் சிக்குண்டு மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். (38)

### நாவற்குழி அன்ட்ரீஸ் தொழிற்சாலை

# செயலிழந்துள்ளதால் தொழிலாளர் பரிதவிப்பு

நாவற்குழியில் இயங்கிவந்த (அன்ட்ரீஸ்) கடல் உணவு பதனிடும் தொழிற்சாலை கடந்த ஆறு மாதங்களாக மூடப்பட்டு உள்ளது.

இதன் காரணமாக அத் தொழிற்சாலையில் வேலை செய்து வந்த நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். இத் தொழிலாளர்கள் தமது நாளாந்த வாழ்க்கையினைக் கொண்டு நடாத்துவதற்கு கஷ்டப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

வடபகுதியில் பிடிக்கப்படும் கடல் வளங்கள் யாவும் இத் தொழிற்சாலையிலேயே பதனிடப்பட்டு கொழும்புக்குக் கொண்டு சென்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

முக்கியமாக வடபகுதியில் பிடிக்கப்படும் 'இறால்' இத் தொழிற் சாலையினூடாகவே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது இத் தொழிற்சாலை இயங்காமல் இருப்பதால் வடபகுதிக் கடற்றொழிலாளர்களின் வருமானம் மிகவும் பாதிக்கப் பட்டு உள்ளது.

போக்குவரத்து, பாதுகாப்பு சீரின்மை ஆகிய காரணங்களாலேயே தொழிற்சாலை மூடப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. வெளிநாட்டு நிறுவனம் ஒன்றே இத் தொழிற்சாலையை நடாத்தி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (43)

### சபையில் சு. க. எம். பி. சாட்டை

# இந்தியாவின் மிரட்டலுக்கு ஜே.ஆர். அஞ்சியவராகச் செயற்பட்டார்!

"இந்திய மத்திய அமைச்சரவையின் முன்னாள் இணையமைச்சர்களான நட்வர்சிங்கும், சிதம்பரமும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் எவ்வளவு தூரம் அதிகாரத் தனமாகப் பேசினர் என்பதை நாமறிவோம். மாகாணசபை வரக்காரணம் இந்தியாவின் அச்சுறுத்தலே'' என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எம். பியான எஸ். எல். குணசேகர பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கான குறை நிரப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

''மேற்படி இருவரும் இணையமைச்சர்களாக இருந்த போதிலும் ஜெயவர்த்தனாவுடன் அதிகாரமாகவே பேசினர். இந்தியாவின் அச்சுறுத்தலாலேயே ஐ. தே. க அரசு மாகாண சபைக்கு இணங்கியது. இது வீண்செலவு கலைத்து விடுங்கள். தமிழர்களுக்கு விசேட உரிமை ஒன்றை கொடுப்பதாகச் சிங்களவர்கள் எண்ணிவிடுவர் என்ற காரணத்தினால்தான் வட, கிழக்குதவிர்ந்த ஏனைய மாகாணங்களிலும் மாகாண சபைகளை ஜெயவர்த்தனா அமைத்தார்''.

## விசாரணைகள் இடைநிறுத்தம்

மாவீரர் நாள் கொண்டாடப்படுமுகமாக 21-ம் திகதியிலிருந்து 27-ம் திகதி வரை தமிழீழ இணக்கமன்றுகளின் சகல விதமான விசாரணைகளும் ஒத்திவைக்கப் பட்டுள்ளன.

இத்தினங்களில் வரும் விசாரணைகள் 27-ம் திகதிக்கு அடுத்துவரும் விசாரணைத் திகதிகளில் விசாரிக்கப்படும்.

இணக்கமன்று உறுப்பினர்களும், பொறுப்பாளர்களும் இக்காலத்தில் மாவீரர் நாள் நிகழ்ச்சிகளில் கலந்து ஒத்துழைக்குமாறு வி. பு. ம. முன்னணி தமிழீழ இணக்கமன்று கேட்டுள்ளது. (66)

## மேலும் சலுகைகள்

சுயவிருப்பத்தில் இளைப்பாறுவோருக்கான விண்ணப்ப முடிவுத்திகதி அடுத்த ஆண்டு (1991) ஜனவரி 31-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாககொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை இவ்வாறு இளைப்பாறிச் செல்வோருக்கு மேலும் பல சலுகைகளை அளிக்கும் பொருட்டு திருத்தம் செய்யப்பட்ட சுற்றுநிருபம் ஒன்றும் தற்போது பொது நிர்வாக அமைச்சினால் தயாரிக்கப் பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாணவருக்கு மாற்று ஏற்பாடு

இராணுவ முகாமுக்குள் இருக்கின்ற பாடசாலைகளில் கல்விகற்றுவந்த மாணவர்களின் கல்வி பாதிக்காத வகையில் அந்த மாணவர்கள் தாங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தும் கற்று வருவதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக வேலணைக் கல்விக் கோட்ட அலுவலக உதவிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (19)

## வீதி திருத்தம்

சாவகச்சேரிப் பெருங்குளம் சந்தியில் இருந்து மட்டுவில் வரையுள்ள இரண்டுமைல் தூரமான சீரற்ற வீதி அப்பகுதி மக்களின் முயற்சியால் தார்போட்டுத் திருத்தப் பட்டுவருகின்றது.

வீதியின் பெரும்பாலான பகுதிகள் திருத்தியமைக்கப் பட்டுள்ளதுடன்- அவ்வீதிக்குத் தேவையான தார் சாவகச்சேரி நகரசபையின் விசேட ஆணையாளர் திரு. த. நவரத்தினத்தால் வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (32)

### வட, கிழக்கு இளைஞர்

# தோட்டப் பகுதிகளில் தங்க அனுமதியில்லை

மலையகத்துத் தோட்டப் பாடசாலை ஆசிரியர் விடுதிகளில் வெளியார் குறிப்பாக வட, கிழக்குப் பகுதி இளைஞர்கள் நுழைவதும், தங்கியிருப்பதும் தடைசெய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சுவீகரிக்கப்பட்ட தோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் வடக்கு, கிழக்குப் பகுதி ஆசிரியர்கள தத்தம் விடுதிகளில் அப்பகுதி இளைஞர்களை தங்க அனுமதிக்கக் கூடாதென தோட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது (23)

# தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலையவில்லை

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விடவில்லை என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் யு. என். ஐக்கு அவர் அளித்த பேட்டியில் தமிழகத்தில் இத்தகைய பிரச்சினைகள் ஏதும் இல்லை என்பதனை நன்கறிவார்கள் என்று சொன்னார்.

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு மிகவும் சீர்குலைந்து விட்டது என லோக சபையில் இந்திரா காங்கிரஸ், அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியது குறிப்பிடத்தக்கது.


# மொழிபெயர்ப்பாளர், எழுத்தாளர் தேவை

ஆங்கில - தமிழ் மொழிபெயர்ப்பாளர்களும் எழுத்துத்துறையில் அனுபவம் உள்ளவர்களும் உடன்தேவை. அனுபவம், தகைமை, வயது விபரமாக குறித்து விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1103, பே/பா. முரசொலி.

11096


# 8-ஆம் மாத நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 |  | 23 |
| — | | — |
| 03 | | 03 |
| — | | — |
| 1968 | | 1990 |

## செல்வி சுப்பிரமணியம் சுபலதா (லதா)

திதி: 19 - 11 - 1990

அன்பே லதா நீரின்றி இங்கே
அனலாய்த் துடிக்கின்றோம்
கண்ணீரும் வற்றிச் செந்நீரும் வற்ற
கதறி அழுகின்றோம் - காணவில்லையம்மா
காசினியில் இனி எப்ப அம்மா நீ
காட்சிதர வந்துநிப்பாய் லதா

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நல்லூர் கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணன், தம்பிமார், தங்கைமார்
நண்பர்கள்.

ஜெகன் போட்டோ

11097

# திசை மாறும்

- பதுமலாஞ்சனன்

மின்னல்கள் இருளைத் தார் தாராய்க் கிழித்தன.

வேடன் விரித்த வலையில் அகப்பட்டு எந்த நேரத்திலும் உயிர் பிரிந்து விடலாம் என்ற பதற்றத்துடன் பயத்தினால் உடல் நடுங்கப் படுத்துக் கிடந்தது மான்.

குருட்டு இருளில் சாவின் துயரம் முகத்திலறையும் துயராய் மிளிர்ந்தது.

பற்றைக்குள பதுங்கி மறைந்திருந்த நரிக்கு ... இரத்தம் தோய்ந்த சதையும் பிண்டமும் - நினைவிலேயே நாவில் ருசித்தது. மான் இறந்த பிறகோ .... இறக்க முன்னரோ அதனைக் கடித்துக் குதறும் வெறி.

கண்களில் கொப்பளித்துச் சுரந்த கண்ணீருடன், நரியை நண்பன் என்று நினைத்துத் தீனமாய்க் கூப்பிட்டது மான்.

''நரி அண்ணா, நரி அண்ணா, நான் வலையிலை அகப்பட்டுப் போனன். நல்ல வேளை நீங்கள் வந்திட்டியள். என்னைக் காப்பாத்தி விடுங்கோ நரி அண்ணா ...''

நரியின் முகத்தில் காவிய சோகம் திரையிடுகிறது. நல்ல நடிகன் நரி.

''ஐயோ ...... ஐயோ ... இண்டைக்கு வெள்ளிக்கிழமை. விரதநாள். நான் தோல் வலையிலை முட்டிறதில்லை இல்லாட்டி ... இல்லாட்டி ... வேறை ஒரு நாள் எண்டா ... நான் கட்டாயம் உன்னைக் காப்பாத்துவன் ...''

நரியின் கண்களில் நீலிக் கண்ணீர்!

★ ★ ★ ★

பிரதமர் பாரிசுக்குப் போனார். பனிமூட்டம் விலகாத காலைப் பொழுது! கனத்த இரும்புத் திரை ஒன்றை நீட்டி விட்டது போல் கரு மேகங்கள் கூடியிருந்தன. வானத்திலும், மனங்களிலும்.

அரச பயங்கரவாத வலையில் அகப்பட்ட தமிழா.

சிங்களவர்களின் பிரதிநிதிகள், பிரதமரைக் கண்டனர்.

கத்தியால் கீறிய ரத்தக் கட்டிகளாய்க் கோஷங்களையும் கேள்விகளையும் வீசினர்.

''பிரதமரே, வெளியே வாரும். எமக்குச் சிறிது உதவி செய்யும் நாம் மனிதர்களாய், மனிதர்களுக்குரிய உரிமையோடு இலங்கையில் வாழலாமா முடியாதா என்று சொல்லும் ..''

வெறித்த விழிகளுடன் திசைகளை அளந்தார் அவர். சிறிதே கலங்கிப் போனார். ஆயினும் சமாளித்துக் கொண்டார்.

''நாங்கள் பௌத்தர்கள். புத்தர் அன்பையும், கருணையையுந்தான் உபதேசித்தவர். நாங்கள் ஒரு போதும் மனிதக்கொலை பற்றிச் சிந்தித்தே பார்க்க மாட்டோம் ...'' என்றார்.

உண்மைதான். அவர்கள் இங்கே பெண்களையும், குழந்தைகளையும், ஆடு மாடுகளையும் அல்லவா கொலை செய்கிறார்கள்! மனிதர்களை எங்கே கொலை செய்தார்கள்

பிரதமர் நல்ல நடிகர். அரிச்சந்திரன் வீட்டுக்கு எதிர் வீட்டில் வசிப்பவர்.

★ ★ ★ ★

நெஞ்சுக் குழியில் புறாக்குஞ்சு துடிப்பதுபோல் ஓர் உணர்ச்சி படபடத்து நடுங்கிய போது ... மானின் உண்மை நண்பன் — காகம் வந்தது.

தப்புவதற்கும் வெற்றி பெறுவதற்குமான திட்டத்தை மானுக்கு முன்னே மனப்பூர்வமாக வைத்தது. மகிழ்ச்சியுடன் ஒரு முறை இமைகளை அழுந்த மூடித் திறந்த மான் ...... வேடன் வரும் நேரம் செத்தது போல் அசையாமல் கிடந்தது.

வேடன் வந்த போது காகம் மானின் கண்ணைக் கொத்துவது போல் நடித்துக் கொண்டிருந்தது. நரியை விடப் புத்திசாலித்தனமான நடிகன் காகம். மான் இறந்து தான் விட்டதென வேடன் நினைத்தான். வலையை அவிழ்த்துச் சுருட்டினான். ''காகா ...'' என்று காகம் 'சிக்னல்' கொடுக்க ....எழுந்து வேகமாய் ஓடியது மான்.

வேடன் மானை நோக்கி எறிந்தான். பற்றையில் மறைந்திருந்த நரியைக் கொல்லும் ஆயுதமாயிற்று அந்தத் தடி.

★ ★ ★ ★

விரைந்து செல்லும் மரணத்தின் கனத்த கால்சுவடுகள் எப்போதும் ஒரே திசையில் தொடர்வதில்லை.

நெஞ்சின் மென்மையான உணர்வுகளை எல்லாம் எடுத்து வெளியே ஊற்றிவிட்டுப் புரட்டி உருட்டிப் பேசுகிற அரசு எதிர்த் திசையிலேதான் நிற்கிறது.

---

தடுப்பு மருந்துகள் இல்லை,

# வன்னியில் நூற்றுக்கணக்கானோர் தொற்று நோய்களினால் பாதிப்பு

வன்னியில் நூற்றுக்கணக்கானோர் பலவத நோய்களால் பாதிக்கப்பட்டு உரிய மருந்துகள் இன்றி ஆபத்து நிலையில் உள்ளனர்.

வவுனியாவில் கண்நோய், முல்லைத்தீவில் மலேரியா, கிளிநொச்சியில் மூளைக் காய்ச்சல் போன்ற ஆபத்தான நோய்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற்றுக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏலவே ஏற்பட்ட வரட்சியாலும், பெய்து வந்த கடும் மழையாலும், குடிநீர் சுகாதாரச் சீர்கேட்டாலும் இத்தகைய நோய்கள் பரவுவதாக வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (38)

## நூல்கள் வழங்கப்பட்டன

வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் இயங்கும் நூலகங்களுக்கு ஒப்படைக்க வழங்கப்பட்ட நூல்கள் யாழ் கல்வித் திணைககளத்தினால் கோட்டங்களுக்கு வழங்கப்பட்டன.

இவ் இலவச நூல்களுடன் கல்விப்பணிப்பாளர் ஊடாக சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் நூல்களும் வழங்கப்பட்டுள்ளது. (ப- 17)

---

# மன்னார் ஆஸ்பத்திரி; குறைபாடு நீக்க பிரான்ஸ் டாக்டர் கோரிக்கை

மன்னார் அரசினர் வைத்தியசாலையில் பல அசௌகரியங்கள் நிலவுவதாக அங்கு பணிபுரியும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

மருந்துத் தட்டுப்பாடு, விடுதிக்கான தொலைபேசி வசதியின்மை, அம்புலன்ஸ் வண்டி இல்லாமை, டாக்டர்கள் பற்றாக்குறை முதலிய பலகுறைபாடுகள் நிலவுவதாக அவர்கள் கூறினர்.

இந்நிலை நீக்கப்பட்டு உடனடியாக உரிய வசதிகள் செய்து தரப்படாவிட்டால் வைத்தியசாலை நிர்வாகம் மேலும் பலத்த பாதிப்புறும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## மேன்முறையீடு செய்யலாம்

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தி பெற்று நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டும் அதிபர்கள் சேவை தரம் I, II க்கு தெரிவாகாதவர்கள் தமக்கு அநீதி விளைவிக்கப்பட்டிருப்பின் அதுபற்றி விளக்கி கல்விச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்து அதன் பிரதியைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு சங்கச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இம் மேன்முறையீடுகள் பற்றி மேற்படி குழுத் தலைவர் ஜோர்ஜ் மென்டீஸுடன் தொடர்பு கொண்டு நீதி கிடைக்க ஆவன செய்யப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (32)

## சரவணையில் வாய்க்காலைத்திருத்த சிரமதானம்

சரவணை நாய்க்குட்டி வாய்க்கால் தொடக்கத்தில் இருந்து அராலி இறங்குதுறை வரையுமுள்ள கடல் அணைக் கட்டைச் சிரமதான முறையில் புனரமைத்துக் கொடுக்கச் சரவணை சின்னமடு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினரும் சரவணை நல்லொழுக்க வாலிபர் சங்கத்தினரும் முன்வந்திருக்கின்றனர்.

சுமார் 150க்கு மேற்பட்டோர்கள் கலந்து கொள்ளவிருக்கும் இச்சிரமதானப் பணியில் கலந்துகொள்வோர்க்கு உணவுத் தேவைக்கான பொருட்களை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கமும் கொடுத்துதவ முன்வந்திருக்கின்றன. (19)

## ஸ்ரீலங்காவுக்கும் நிதியுதவி

வளைகுடா நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட சுமார் நாற்பது நாடுகளுக்கு நிதியுதவி வழங்குவதெனச் சர்வதேச செலாவணி நிதியம் தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வாஷிங்டனில் நடைபெற்ற இதன் வருடாந்தக் கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

எகிப்து, ஜோர்தான், துருக்கி ஆகிய நாடுகள் இதனால் முதலில் பயன்பெறும். பாரதம், பங்களாதேஷ், பாகிஸ்தான். ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளும் நிதியுதவி பெறும் நாடுகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மீண்டும் பீரங்கி வேட்டு

வடமராட்சி கிழக்கின் மணற்காடு, குடத்தனை ஆகிய பகுதிகளில் கடற்படையினர் மீண்டும் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தில் அப்பகுதியில் உள்ள சில வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (43)

---

பங்கீட்டுப் பொருள் வழங்கல்:

# அதிகாரிகள் சிலர் அசமந்த போக்கெனக் கண்டனம்

தற்போது நடைமுறையிலுள்ள உலர் உணவுப் பங்கீட்டுக்குத் தேவையான பொருட்கள் யாழ் மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளிலும் உண்டு எனவும் ஆனால் சில அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் இவற்றை மக்களுக்கு விநியோகிக்க முடியாத நிலையில் பல கூட்டுறவுக் கடைகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. சண்முகநாதன் இவ் விநியோகம் இம் மாதம் 10ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 25ஆம் திகதிக்கு முன்னர் முடிக்க வேண்டும் என்றும், இதற்காக சகல கிராமசேவை அலுவலர்களும் புதிய உலர் உணவுப் பங்கீட்டு அட்டைகளை உடனடியாக மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

ஆனால் இவ்வட்டைகள் இன்னமும் சில கிராசேவை அலுவலர்களால் விநியோகம் செய்யப்படாமலும் கூட்டுறவுக் கடைகளுக்கு விபரப்பட்டியல்கள் அனுப்பப்படாமலும் உள்ளன.

இதேவேளை சில கிராம சேவையாளர்கள் தமது வேலைகளை முடித்து உதவி அரசாங்க அதிபர்களின் மேல் ஒப்பத்திற்காக அனுப்பி வைக்கப்பட்ட இவ் வட்டைகள் அங்கேயே எவ்வித நடவடிக்கைகளும் இன்றி தேங்கிக் கிடப்பதாகவும் அறியப்படுகிறது.

பல கஷ்டங்களுக்கும் மத்தியில் கொழும்பு சென்று அரசோடு தொடர்பு கொண்டு இங்குள்ள அனைத்து மக்களுக்கும் நிவாரணப் பொருட்களை வழங்க யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் அனுமதி பெற்றுள்ள இவ் வேளையில் சில அதிகாரிகள் ஏன் இப்படி அலட்சியமாக நடந்து கொள்கிறார்கள் என மக்கள் அங்கலாய்க்கிறார்கள். (66)

---

ரஞ்சன் அங்கலாய்ப்பு

# நல்ல உறக்கமுமில்லை எனக்கு ஏது நிம்மதி?

பாதுகாப்புத்துறை ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தனவுக்கு உறக்கம் வருவது குறைவாம். இதனை அவரே பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார். அக்கரைப்பற்றுக்கு விஜயம் செய்த அவர் ''ஒரு நாளைக்கு ஐந்து மணிநேரமே நான் உறங்குகின்றேன். பயங்கரவாதம் இந்த நாட்டிலிருந்து முற்றாக ஒழித்துக்கட்டப்படும் வரை நான் நிம்மதியாக உறங்கப் போவதில்லை. எனக்கு ஏது நிம்மதி?'' என்று அவர் குறிப்பிட்டார்.

---

ரஞ்சனின் நடவடிக்கையால்

# இலங்கை- இந்திய விரிசல் உருவாகுமா?

பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்ன மேற்கொண்டுள்ள புதிய நடவடிக்கைஒன்று இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் புதிதாக மனக்கசப்பை உண்டு பண்ணும் நிலையினை உருவாக்கக் கூடிய சாத்தியம் உண்டு என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தத்தில் பாஸ்போட் பெற்ற இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரை விமானம் மூலம் இலவசமாக இந்தியாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்கு ரஞ்சன் விஜேரத்ன அங்கீகாரம் அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை- இந்திய வம்சாவளியினரைத் திருப்பியனுப்புவதானால் அங்குள்ள இலங்கை அகதிகளை மீள ஏற்கும் நிலையினை இலங்கை அரசுமீது இந்திய அரசு வற்புறுத்தும் சூழல் முன்னர் உருவானது என்பது இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.

---

பிரதமர் சந்திரசேகர்

# சவாலைச் சமாளிக்க கலைஞரின் உதவி நாடுகிறார்

தமக்கு முன்னுள்ள சவால் மிகுந்த பணிகளை நிறைவேற்றுவதில் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியின் ஒத்துழைப்பினைப் பிரதமர் திரு. எஸ். சந்திரசேகர் நாடியுள்ளார்.

தான் பிரதமராகப் பதவியேற்றதற்கு வாழ்த்து அனுப்பிய கலைஞருக்குப் பிரதமர் நன்றி தெரிவித்து அனுப்பி வைத்துள்ள பதிலிலேயே மேற்கண்டவாறு ஒத்துழைப்பு நாடியுள்ளார்.

### வாசுதேவ நாணயக்கார பேச்சு:

# இளைஞர்களின் விரக்தியே ஆயுதக் கிளர்ச்சியானது

நாட்டின் பிரச்சினைகளுக்குரிய அடிப்படைக் காரணிகள் என்னவென்பதைக் கண்டு பிடித்து அதற்கான பரிகாரம் செய்யவேண்டும். அதை விடுத்து அடக்கு முறையினால் அடக்கி விட முயலுவதால் பிரச்சினைகளும், கொந்தளிப்பும்தான் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் என்று நவசமசமாஜக்கட்சிக் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட எம். பியுமான வாசுதேவ நாணயக்கார கூறினார்.

பண்டாரவளையில் இக் கட்சியின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது அவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

தொடர்ந்து பேசிய அவர்;

அரசும் அதன் முன்னோடிகளும் இந்தப்பிரச்சினைகளை உணரவேண்டும் நம் நாட்டில் உள்ள தமிழ், சிங்கள இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட விரக்தியினாலேயே அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

இந்த நிலை ஏற்பட யார் காரணம். வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றத்தினால் வேதனையுற்றிருந்த இளைஞர்களுக்கு இப்படிப் போனால் வாழ்வு நிறையும் என்று சிலர் காட்டிய அழிவுப் பாதையில் சென்றதினாலேயே நாட்டில் கொந்தளிப்புகள் ஏற்பட்டது.

இனங்களுக்கு இடையில் ஒற்றுமை ஏற்படாதவரை எமது நாட்டில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படாது என்றும் சொன்னார்.

## வவுனியாவில் பல ஏக்கரில் காலபோகம் செய்யவில்லை

வவுனியா நகரிலிருந்து செல்லும் கண்டி வீதியுடன் உள்ள தமிழ்க் கிராமங்களில் இம்முறை நெல்விதைப்பு இடம் பெறவில்லை.

வவுனியா நகரில் நிலை கொண்டுள்ள இராணுவ, ஊர்காவற் படையினரின் கெடுபிடிகளினால் இவ் வீதியுடன் உள்ள மூன்று முறிப்பு, தவசிகுளம், மதகுவைத்த குளம், தோணிக்கல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள், வவுனியா நகருக்கு வெளியே யாழ் வீதியுடன் அண்டிய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இதனால் இக்கிராமங்களில் பல நூற்றுக் கணக்கான ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை. (50)

### வவுனியாவில் ..

மற்றும் குடும்பஸ்தர்களாக இருந்துவந்த உத்தியோகத்தர்கள் அதிகாரிகளது விடுதிகளில் சேகரித்து வைத்திருந்த தளபாடங்கள், சமையற்பாத்திரங்கள், உடுபுடவைகள் உட்பட பல பெறுமதியான பொருட்களும் காணாமற் போயுள்ளன.

நாலு மாதங்களின் பின் தமது கடமைகளுக்குச் சென்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது பொருட்கள் காணாமற் போனதையிட்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

### தமிழக...

செய்த போராளிகளை தமிழக அரசுவிடுவித்தது குறித்து அட்மிரல் ராம்தாஸ் தெரிவித்த கருத்தை முதலமைச்சர் கருணாநிதி பொருட்டாக மதிக்காமல் பதிலளித்தமையையும் ராமமூர்த்தி கண்டித்துள்ளார்.

இதனிடையே தம்மீது ஆதாரமின்றி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருவது குறித்து தாம் பிரதமர் சந்திரசேகரிடம் முறையிடப் போவதாக முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

### சிகிரியா...

மலை நோக்கி புறப்பட்டுச் சென்றது,

இக்கப்பல், பருத்தித்துறையில் மேலதிகமாக நின்ற இழுவைப் படகு ஒன்றையும் இழுத்துச் சென்றது.

இவ் இழுவைப் படகு யாழ் நகரப்பகுதியில் பரீட்சார்த்தமாக கப்பலிலிருந்து பொருட்களை இறக்குவதற்கெனக் கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### அமைதிப் ...

வெற்றியீட்டியது 'றோ'. மட்டுமல்ல, அதேபோல ஸ்ரீலங்காவில் 'றோ' தனித்து தோல்வியடையவும் இல்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### குழப்பத்தை ..

நிலவுவதாக பிரசாரம் செய்வதில் இவர்களுக்கு ஒரு சந்தோஷம் என்றும் அவர் சொன்னார்.

மலையகத்தில் குழப்பம் நிலவினால் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு கடமைக்குப் போகாமல் இங்கேயே இருந்து விடலாம் என்று சில பொலிஸார் எண்ணுகிறார்கள் என்றும் அவர் சொன்னார்.

### இரு ..

ஞானம் ஆகிய இரு இளைஞர்களுமே தமது சம்பளத்தைப் பெறுவதற்காக மதவாச்சி புகையிரத நிலையத்துக்குச் சென்றபோது இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இவ்விருவரும் விடுவிக்கப்படாமல் தொடர்ந்தும் மதவாச்சி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (50)

### திரியாய்...

இதைத் தொடர்ந்து மறுநாள் முகாமில் இருந்து வெளியேறிய ராணுவம், விடுதலைப் புலிகளைச் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்த முயற்சிகளை மேற்கொண்ட போது அப்பகுதியில் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் இடம் பெற்றன. மோதல்கள் அரைமணி நேரம் நீடித்தன.

மோதலின் போது புலிகள் தரப்பில் கப்டன் வாசு (சாம் பல்தீவு) வீரமரணமடைந்தார் ராணுவ சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

### 2-ம் கட்ட ..

கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டவர்களே கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர். இம் மாதம் 1-ம் திகதி ஒரு தொகுதி நோயாளி கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டது தெரிந்ததே. (70)

### 80 ஆயிரத்துக்கு .

மதவுகளுக்கு அடியிலும், படுவான்கரைக் காடுகளிலும் தங்களது வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எட்டி நடந்தால் கிட்டவாக உள்ள எங்கள் தாயகத்தின் ஒரு பகுதியில் எங்கள் சகோதரர்கள் சிங்களப்பேரினவாதிகளாலும், முஸ்லிம் காடையர்களினாலும் அடித்து விரட்டப்படுகின்றார்கள்.

இவர்கள் ஒருநேர உணவிற்கே வழி அற்று மாற்று உடைகள் எதுவுமின்றி உதவிகள் அற்றுத் தவிக்கின்றனர்.

எங்களது கொடியில் மலர்ந்த பூக்களில் சில வாடிக் கிடக்கின்றன. அவர்களுக்கு உதவவேண்டியது எமது கடமை.

சிங்கள மக்களுக்கு உதவ ஸ்ரீலங்கா அரசு இருக்கின்றது. முஸ்லிம் மக்களுக்கு உதவ ஸ்ரீலங்கா அரசும், அரபு நாடுகளும் இருக்கின்றன. தமிழ் மக்களைப் பொறுத்தவரை நாம்தான் எமக்கு உதவ வேண்டும்.

இன்று தென் தமிழீழத்தில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டு விரட்டப் படுகின்றார்கள்.

அப்பகுதியில் மீளக் குடியமர்த்தல் என்னும் பெயரில் சிங்களக் குடியேற்றம் நடக்கின்றது. 1732 ச. மைல் பரப்பளவான அம்பாறை மாவட்டத்தில் 1200 ச. மைல்களை சிங்களவர்கள் ஆக்கிரமித்து விட்டார்கள். அவ் ஆக்கிரமிப்பாளர்களுடன் மோதுவதை விடுத்து சிங்களப்படைகளுடன் சேர்ந்து எண்பதாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களை முஸ்லிம்கள் படுகொலைகள் மூலம் விரட்டி வருகின்றனர்.

தமிழர்களை விரட்டி அப்பகுதிகளை தாங்கள் ஆக்கிரமிக்கலாம் என முஸ்லிம்கள் நினைக்கின்றனர். எவ்வளவோ கொடுமைகளை இனப்படுகொலைகளை சந்தித்தும் அந்த மக்கள் விடுதலைப் போராட்டத்தில் மேலும் மேலும் உறுதியாகவே இருக்கின்றார்கள்.

அவ்வளவு இடைஞ்சல்களுக்கு மத்தியிலும் அம்மக்கள் தங்களது பகுதியின் ஏதோ ஒரு மூலையில் மண்ணைக் கிழறி வாழவே முயற்சிக்கின்றனர்.

அந்த மண்ணைவிட்டு அவர்கள் ஓடத்தயாராக இல்லை.

எதிர்வரும் மாவீரர் வாரத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு. அம்பாறைப் பகுதிகளில் வாழும் எமது சகோதரர்களுக்கு உதவும் வகையில் மற்றைய மாவட்டங்களில் வாழும் தமிழ்மக்களிடமிருந்து உதவிகள் பெற இருக்கின்றோம். இது-தமிழீழம் ஒன்றுபட்டு நின்று - ஒரே தலைமையின் கீழ் போராடும் காலம். எம்மக்கள் எங்கு பாதிக்கப்பட்டாலும் உதவ வேண்டியது எமது கடமையாகும். உலகமே வெட்கப்படும் அளவிற்கு நாமே எமது உடன் பிறப்புக்களுக்கு உதவ முன் வருவோம்.

எல்லோருமே இப் போரினால் பாதிக்கப்பட்டுத்தான் உள்ளார்கள். ஆனாலும் அதிக அளவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்தளவு பாதிப்பைச் சந்தித்திருக்காத தமிழீழ மககள் அனைவரும் உதவ முன்வரவேண்டும்.

வரும் துன்பங்களைபகிர்ந்து கொள்வோம்.

உணவு, உடைகளைப் பகிர்ந்து கொள்வோம ஒரே தலைமையின் கீழ் ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைந்து போராடுவோம். இவ்வாறு அவர் அச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

---

## காலமானார்

### சபாபதிப்பிள்ளை இராசரெத்தினம்

(வித்துவான், இளைப்பாறிய ஆசிரியர்)

வேலணையூர் வித்துவான் சபாபதிப்பிள்ளை இராசரெத்தினம் அவர்கள் காலமானார். இவர் குணேஸ்வரியின் அன்புக் கணவரும், சிந்தாதேவி (ஆசிரியை யாழ் கன்னியர் மடம் மகாவித்தியாலயம்,) டாக்டர் மனோகரன் (லண்டன்), தாமரைச்செல்வி (ஆயுர் வேத டாக்டர், கைதடி.), கலைவேந்தன் (ஜேர்மனி), எழில்இளங்கதிர் (வேலைப்பரிசோதகர், கச்சேரி, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வசோதி (முன்னாள் முகாமையாளர் ரியோ குறூப் ஒவ் கம்பனி), டாக்டர் மனோரஞ்சிதம் (லண்டன்), சேவியர் (ஆசிரியர் புனித மரியாள் வித்தியாலயம், முன்னாள் முரசொலி நிருபர்), வனிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோஜா, ரம்யா, சிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (19-11-90) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் 253/3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்றுத் துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்; எழில்இளங்கதிர் (மகன்)

11095

---

# உலக அரங்கில்

## விமானப்படை போரைத் தீர்மானிக்காது - ஈராக் தளபதி

ஈராக்குடனான போர் மூண்டால் சில தினங்களிலேயே சர்வதேசப் படைகளினால் ஈராக்கியத் துருப்புக்களை விரட்டியடிக்க முடியும் என சவுதி அரேபியாவில தங்கியுள்ள பிரிட்டிஷ் படைகளின் தளபதி லெப். ஜெனரல் சபித்தியாட லோப்பியா தெரிவித்திருக்கின்றார்.

அமெரிக்காவின் விமானப்படை பலம் வாய்ந்தது. இது ஈராக்கியப் படையினருக்கும் தெரியும் எனவும் பிரிட்டிஷ் தளபதி குறிப்பிட்டார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஈராக்கியத் தளபதி ஒருவர் ''விமானப்பலம் ஒன்று மட்டும் போரின் வெற்றியைத் தீர்மானித்துவிடாது. தரைப்போரில் ஈராக்கை யாரும் எதிர்கொள்ள முடியாது. எட்டு வருடம் போர் நடத்திய அனுபவம், சிப்பாய்களின் எண்ணிக்கை என்பன ஈராக்கின் போர்ச்சாதகத் தன்மையாகவே இருக்கிறது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

## கனடாவின் பொருளாதாரம் ஆபத்தான நிலையில்!

கனடாவில் வேலைவாய்ப்பின்மை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வேலைவாய்ப்பின்மை 8 4 வீதத்தால் அதிகரித்துள்ளதாக கணிப்பீடுகள் காட்டுகின்றன. கனடாவின் பொருளாதாரம் பெரும். வீழ்ச்சியை நோக்கிச் செல்வதாக கனேடிய புள்ளிவிபரத்திணைக்களம் தெரிவிக்கிறது. நிர்மாணத்துறையிலும், உற்பத்தித்துறையிலுமே அதிகளவு வீழ்ச்சி காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நிக்கரகுவா கிளர்ச்சியாளர் வீதி மறியல் போராட்டம்

நிக்கரகுவாவில் கொன்ரா கிளர்ச்சியாளர்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ள வீதித்தடைகளை உடனடியாக அகற்றுமாறு நிக்கரகுவா இராணுவத்தை அரச அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தாம் அரசிடம் ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் முன்னதாக உறுதியளிக்கப்பட்டபடி எந்த உதவியும் இதுவரை அரசினால் வழங்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டியே கொன்ரா கிளர்ச்சியாளர்கள் இந்த வீதி மறியல் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இவர்கள் பிரதான வீதிகளையும், கட்டிடங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடாத்தி வருகின்றனர்.

ஆர்ப்பாட்டத்தை நிறுத்துவதற்குப் பணிக்கப்பட்டுள்ள ராணுவம் முன்னாள் சன்டினிஸ்டா அரசின் செல்வாக்கு கொண்ட ர்ாணுவம்; கொன்ரா கிளர்ச்சியாளர்கள் அமெரிக்க ஆதரவை முன்னர் பெற்றுவந்தவர்கள். இதனால் நிக்கரகுவா ஜனாதிபதி வயலெற்றா சமோராவுக்கு இப்பிரச்சினை ஓர் பலப்பரீட்சையாகவே இருக்கின்றது.

புதிய ஜனாதிபதி திருமதி வயலெற்றா சமோரா இவ் வருட ஆரம்பத்திலேயே சன்டினிஸ்டா அரசைத் தேர்தலில் தோற்கடித்துப் பதவிக்கு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவின் கல்வியறிவு

சீனாவில் பல சிறுவர்கள் தமது ஆரம்பக் கல்வியைக் கூட பூர்த்திசெய்வதில்லை என அண்மைக்கால கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. வருடாந்தம் 17 மில்லியன் சிறுவர்கள் ஆரம்பக்கல்வியைக் கைவிட்டுச் செல்கின்றனர்.

சீனாவில் கல்விக்குக் குறைந்தளவு நிதியே ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 19-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.